Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

**செய்தியாளர்கள் தேவை**




தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 | இதழ் Issue : 070 | செவ்வாய்க்கிழமை Tuesday | 09.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## நார்வே செஸ்ஸில் வரலாறு படைத்த
# பிரக்ஞானந்தாவுக்கு தமிழக அரசு ரூ.50 லட்சம் ஊக்கத் தொகை



சென்னை: நார்வே செஸ் 2026 தொடரில் முதல் இந்தியராகப் பட்டத்தைவென்று வரலாற்றுச் சாதனை படைத்த கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு ஊக்கத்தொகை ரூ.50 லட்சத்திற்கான காசோலையை முதல்வர் விஜய் வழங்கினார். இது குறித்து வெளியிடப்பட்டு உள்ள செய்திக் குறிப்பில், "தமிழக முதல்வர் விஜய் இன்று தலைமைச் செயலகத்தில், நார்வே தலைநகர் ஆஸ்லோவில் நடைபெற்ற நார்வே செஸ் 2026 தொடரில் முதல் இந்தியராகப் பட்டத்தை வென்று, வரலாற்றுச் சாதனை படைத்த கிராண்ட்மாஸ்டர் ஆர். பிரக்ஞானந்தாவுக்கு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் உயரிய ஊக்கத் தொகையான 50 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

அப்போது, கிரா ண்ட்மாஸ்டர் ஆர்.பிரக்ஞானந்தா நார்வே செஸ் 2026 தொடரில் வெற்றி பெற்றதற்காக வழங்கப்பட்ட கோப்பையைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக உருவாக்கிடும் வகையில், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், பதக்கங்களை வெல்பவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், செஸ் கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகைத் திட்டத்தின் (ELITE) கீழ் ஆண்டுதோறும் 30 லட்சம் ரூபாய் உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

முதல்வர் தலைமையின் கீழ், தமிழ்நாடு அரசு, விளையாட்டை ஒரு சக்திவாய்ந்த சமூக மாற்றக் கருவியாகக் கருதி செயலாற்றி வருகிறது. இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமான வழியில் செலுத்தி, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவித்து, சமூகத்தில் நேர்மறையான மாற்றத்தை உருவாக்குவதே அரசின் தலையாய நோக்கமாகும். தூய்மையான, நேர்மையான மற்றும் அறநெறி சார்ந்த விளையாட்டுக் கலாச்சாரத்தை வளர்த்தெடுப்பதில் தமிழ்நாடு அரசு உறுதிபூண்டு உள்ளது.

அதனைச் செயல்படுத்தும் விதமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம், சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்ட ரங்கத்தில் "ஹோம் ஆஃப் செஸ்" என்றதனிப்பட்ட சதுரங்க அகாடமி நிறுவப்பட்டுள்ளது. இந்த அகாடமியின் மூலம் முறைப்படி பயிற்சி முகாம்களை நடத்துதல், வீரர்களின் செயல்திறனைக் கண்காணித்தல், சர்வதேச அளவிலான அனுபவத்தை வழங்குதல், நவீன கருவிகள் மற்றும் ஒத்திகை மென்பொருள்களின் மூலம் மேம்பட்ட பயிற்சி அளித்தல் போன்றவை வழங்கப்படுகிறது.

அத்துடன், மனவளப் பயிற்சி, முறையான திட்டமிடல் மற்றும் வீரர்களின் முழுமையான அறிவுத்திறன் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த முயற்சி அனைத்து வயதினரையும், குறிப்பாக இளம் வீரர்களை ஊக்குவித்து, சர்வதேச மாஸ்டர் (IM) மற்றும் கிராண்ட்மாஸ்டர் (GM) போன்ற உயரிய சதுரங்கப் பட்டங்களைப் பெற வழிவகை செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காங்கிரசின் அணுகுமுறையால் திமுக பலவீனடைந்தது; இந்தியா கூட்டணி கூட்டத்தில் திருமாவளவன் பேச்சு




பாஜக அரசை எதிர்கொள்வது குறித்தும் புதிய அரசியல் யுக்திகளை ஆலோசனை செய்யவும் எதிர்க்கட்சிகளாக உள்ள இந்தியா கூட்டணி கட்சிகள் டெல்லியில் இன்று ஆலோசனை நடத்தின.

இந்தகூட்டத்தில்காங்கிரஸ்,திரிணாமுல்காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், சமாஜ்வாதி உள்பட 23 அரசியல் கட்சிகள் பங்கேற்றன. இந்த கூட்டணியில் இடம்பெற்றிருந்த திமுக இக்கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இந்நிலையில், இந்த கூட்டத்தில் பங்கேற்ற விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், காங்கிரஸ் கட்சியின் அணுகுமுறையால் தேர்தலில் திமுக பலவீனமடைந்ததாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக திருமாவளவன் கூறியதாவது,

இந்தியா கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் அனைவருக்கும் வணக்கம் !

பாஜக அரசின் தவறான அணுகுமுறையால் இந்தியாவின் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்கு உள்ளாகி உள்ளது. அடுத்தடுத்து நடந்து வரும் பேப்பர் லீக் காரணமாக தேர்வுகள் ரத்துசெய்யப்பட்டு மீண்டும் நடத்தப்படுகின்றன. இதில் பல்வேறு முறைகேடுகள் நடந்திருப்பது அம்பலமாகி உள்ளது. இதனால் லட்சக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதற்கு பாஜக அரசில் எவருமே பொறுப்பேற்கவில்லை. இதற்கு பொறுப்பேற்க வேண்டிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மௌனமாக இருக்கிறார். இதன் காரணமாக மாணவர்கள் இளைஞர்கள் தன்னெழுச்சியாகப் போராட்டங்களை நடத்தி உள்ளனர். இது அரசியல் கட்சிகள் அனைவருக்கும் எச்சரிக்கை மணியாகும். இளைஞர்களுடைய பிரச்சனைகளுக்காக நாம் தெருவில் இறங்கி போராடாத காரணத்தினால் தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இளைஞர்களின் குரலை வெளிப்படுத்துகிற காக்ரோச்ஜனதாபார்ட்டி என்ற அமைப்பை நாம் எதிர்நிலையில் வைத்து பார்க்கக் கூடாது. அவர்கள் எழுப்பும் பிரச்சனைகளை இன்னும் விரிவான தளத்தில் இந்தியா கூட்டணி முன்னெடுக்க வேண்டும். அதற்காக நாடு தழுவிய போராட்டங்களை நாம் அறிவிக்க வேண்டும்.

நரேந்திர மோடி அரசின் தவறான வெளியுறவு கொள்கையால் இப்போது நாடு திவாலாகும் நிலை ஏற்பட்டுள்ளது. நம்முடைய அந்நிய செலாவணி கையிருப்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதை எப்படி சமாளிப்பது என தெரியாத பிரதமரோ மக்களெல்லாம் சிக்கன நடவடிக்கைகளை பின்பற்றுமாறு அறிவுரை சொல்கிறார். கோவிட் காலத்தில் எப்படி திறமையற்ற இந்த அரசால் லட்சக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்தார்களோ அதே போல இப்போதும் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. இதை அம்பலப்படுத்தி நாடு தழுவிய அளவில் நரேந்திர மோடி அரசுக்கு எதிரான போராட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும்.

இந்தப் போராட்டங்களை செய்வதற்கு எதிர்க்கட்சிகள் இடையே புரிந்துணர்வும் ஒற்றுமையும் அவசியம். அண்மையில் நடந்து முடிந்த தேர்தல்களின் போது காங்கிரஸ் கட்சி கையாண்ட அணுகுமுறையால் இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகள் இடையே அதிருப்தி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கேரளா, மேற்குவங்கம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி மேற்கொண்ட அணுகுமுறை இந்த கூட்டணிக்கு உறுதுணையாக இருந்த கட்சிகளான திரிணாமுல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, திமுக ஆகியவற்றை பலவீனம் அடையச் செய்திருக்கிறது. இது விரும்பத்தக்கது அல்ல. எனவே காங்கிரஸ் கட்சி தனது அணுகுமுறையை மறு ஆய்வு செய்து இந்த ஒற்றுமையை இன்னும் வலுவாக முன்னெடுப்பதற்கான வழிகளை கண்டறிய வேண்டும்.

இந்தியா கூட்டணியில் தேசியக் கட்சிகளும் மாநில கட்சிகளும் ஒன்றாக இணைந்து செயல்பட்டு வருகிறோம்.

இயல்பாகவே தேசியக் கட்சிகளுக்கும் மாநில கட்சிகளுக்கும் இடையே முரண்களும் இருக்கும். அவற்றை கூர்மைப்படுத்தக்கூடாது. அந்தப் பொறுப்பு மாநில கட்சிகளுக்கு மட்டுமல்ல தேசிய கட்சிகளுக்கும் உள்ளது. இப்போது மத்திய மாநில உறவுகள் மிக மிக சீர்கேடு அடைந்துள்ள சூழலில் தேசியக் கட்சிகள் கூட்டாட்சி என்ற அடிப்படையில் தங்களது நிலைப்பாடுகளை மறுபரிசீலனை செய்து மாற்றி அமைக்க வேண்டும்.. இதன் ஒரு அங்கமாக ஒன்றிய பாஜக அரசு அறிமுகப்படுத்தியுள்ள மும்மொழிக் கொள்கையைப் பற்றி தெளிவான நிலைப்பாட்டை இந்தியா கூட்டணி எடுக்க வேண்டும். அது போலவே மத்திய மாநில உறவுகளை ஆராய்ந்து தமிழ்நாடு அரசின் சார்பில் நீதிபதி குரியன் ஜோசப் ஆணையம் முன் வைத்துள்ள பரிந்துரைகளையும் இந்தியா கூட்டணி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்றார்.

தமிழக தேர்தலில் காங்கிரஸ் கூட்டணியில் இடம்பெற்றிருந்த விடுதலை சிறுத்தைகள் 2 தொகுதிகளில் வெற்றிபெற்றது. தேர்தலுக்குப்பின் விடுதலை சிறுத்தைகள் தவெக அரசு ஆட்சி அமைக்க ஆதரவு அளித்துள்ளது. தவெக அரசில் விடுதலை சிறுத்தைகள் எம்.எல்.ஏ. வன்னியரசு சமூக நீதித்துறை அமைச்சராக செயல்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM


| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

## வானிலை முன்னறிவிப்பு: கோவை, தேனி உள்ளிட்ட 10 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை: தமிழகத்தில் கோவை,தேனி உள்ளிட்ட 10 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கடலோர கர்நாடக பகுதிகளிலிருந்து கடலோர ஆந்திர பகுதிகள் வரை சுமார் 3.1 கிமீ முதல் 4.5 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வுபாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் நாளை வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி,மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.



திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகள்,நீலகிரி,கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி, தருமபுரி, சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். 10-ம் தேதி திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலும், 11-ம் தேதி நீலகிரி, கோவை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 104 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 86 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் 12-ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் 11 செமீ, நாலுமுக்கில் 10 செமீ, காக்காச்சியில் 9 செமீ, கோவை மாவட்டம் உபாசி, சின்னக்கல்லார், திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலையில் தலா 8 செமீ, கோவை மாவட்டம் வால்பாறை, சின்கோனா, கன்னியாகுமரி மாவட்டம் சிற்றாறில் தலா 6 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## திமுக தோல்விக்கான காரணங்களை தெரியாமல் தவெக அரசையும், அதற்கு ஆதரவு அளித்த கட்சிகளையும் தரம் தாழ்ந்து விமர்சிப்பது நல்ல படிப்பினை பெறவில்லை என்பதை காட்டுகிறது

### இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச்செயலாளர் முகமது அபூபக்கர் தென்காசியில் பேட்டி

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநில பொதுச்செயலாளர் முகமது அபுபக்கர் தென்காசி மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்



சிகளில் பங்கேற்பதற்காகவந்திருந்தநிலையில் தென்காசியில் உள்ள த னி ய ா ர் விடுதியில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது

தமிழ்நாட்டில் புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றிக் கழக அரசுக்கு ஆட்சி நடத்துவதற்கான போதுமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அந்த அவகாசத்தை வழங்காமல் எதிர்க்கட்சியாக உள்ள திமுகஆட்சிசெய்ய முடியாத அளவிற்கு கடுமையாக விமர்சித்து வருகிறது. கால அவகாசம் வழங்குவது தான் எதிர்க்கட்சிக்கு அழகு திமுக தனது தோல்விக்கான காரணத்தை ஆராயாமல் திமுக கூட்டணியில் இடம் பெற்ற தங்களைப் போன்ற கட்சிகளை தரம் தாழ்ந்து விமர்சிப்பது திமுக நல்ல படிப்பினை பெறவில்லை என்பதை காட்டுகிறது

தவெகவுக்கு ஆதரவளித்த காரணத்தினால் பேராசிரியர் காதர் மொய்தீனை விஜயின் ரசிகர் மன்ற தலைவர் ஆகிவிட்டார் என்று திமுகவினர் தரம் தாழ்ந்து விமர்சித்து வருகின்றனர் அதிமுக ஆட்சிக்கு திமுக மற்றும் கூட்டணி தலைவர்கள் உதவ வேண்டும் என்று பேசினார்களே இவர்கள் எப்போது எடப்பாடியின் நற்பணி மன்றத்திற்கு தலைவர்கள் ஆனார்கள் என்று முகமது அபுபக்கர் கேள்வி எழுப்பினார்.

அண்ணாமலையால் தொடங்கப்பட்ட புதிய அமைப்பினால் இஸ்லாமியர்களின் வாக்கு பிரியாது ஆர்எஸ்எஸ் அமைப்பில் உள்ள உட்பிரிவுகளில் இதுவும் ஒன்று அண்ணாமலை கட்சி ஆரம்பித்தால் தமிழகத்தில் எந்த மாற்றமும் எழுச்சியும் வரப்போவதில்லை என்று கூறினார் அதிமுகவில் ஜெயலலிதாவின் மறைவிற்கு பிறகு நல்ல தலைமை இல்லாத காரணத்தினால் அதிமுக அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்றும் அமைச்சரவையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இடம்பெறுவது சிலருக்குபிடிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

பெட்ரோல்,டீசல்விலை உயர்வினால் மக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். மத்திய அரசு பெட்ரோல்,டீசல் விலை உயர்வை கட்டுப்படுத்த தவறிவிட்டது. போர்க்கால அடிப்படையில் பெட்ரோல், டீசல் விலையை குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது கட்சியின் நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்களும் உடனிருந்தனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதி, காவேரிப்பட்டிணம் கிழக்கு ஒன்றியம், அகரம் ஊராட்சி காவேரிப்பட்டிணம் ஒன்றிய அவைத்தலைவர் மற்றும் முன்னாள் அகரம் ஊராட்சி மன்ற தலைவருமான இராமமூர்த்தி அவர்களின் மனைவி திருமதி. தமிழ்ச்செல்வி அவர்கள் மறைவுக்கு நேற்று கழக நிர்வாகிகளுடன் சென்று மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அவர்களின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்த நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் டிஎ.நாகராஜன், காவேரிப்பட்டினம் ஒன்றிய கழகச் செயலாளர் க.மகேந்திரன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் நகாபூசனம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரமேஷ், ஆவத்துவாடி முன்னாள் துணைத் தலைவர் முரளி, அருள், ஜெயசீலன், பாலு, தட்ரஅள்ளி ஜலபதி, ஆவத்துவாடி ராஜா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்



## நூலக ஆர்வலர்களுக்கு பாராட்டு விழா: நீதியரசர் (ம) மாவட்ட ஆட்சியருக்கு பாராட்டு

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடுகபட்டி பகுதியில் செயல்பட்டு வரும் கவியரசு கண்ணதாசன் கிளை நூலகத்தில் நூலக வாசகர் வட்டம் சார்பில் பாராட்டுவிழாக் கூட்டம் நடைபெற்றது தலைவர் மருத்துவர் . செல்வராஜ் தலைமையேற்று தலைமையுரை வழங்கினார் வடுகபட்டி பேரூராட்சி துணைத் தலைவர் கவிஞர் அழகர் முன்னிலை வகித்தார் நூலகர் ராஜகோபால் வரவேற்புரையாற்றினார்.வடுகபட்டி அரசு பள்ளியில் பயின்று நூலகத்திற்கு தொடர்ந்து வருகை புரிந்து போட்டித் தேர்வுக்குரிய நூல்களை பயன்படுத்தி ஊருக்கும், நூலகத்திற்கும் பெருமை சேர்த்து தற்போது கரூர் மாவட்ட ஆட்சியராக பணிபுரியும் தங்கவேல், மற்றும் நூலகத்திற்கு தொடர்ந்து வருகை புரிந்து படித்தும், நூலகத்திற்கு பல்வேறு உதவிகள் செய்தும் தற்போது மதுரை உயர் நீதிமன்ற நீதிபதியாக உள்ள நீதியரசர் கா. அப்பாத்துரை (நூலக வாசகர் வட்டம் சார்பில் வாழ்த்து மடல் அனுப்பப்பட்டு நன்றியும் பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டது நூலகராக பொருப்பேற்றிருக்கும் ராஜகோபால் அவருக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டதுவடகரைநூலக வாசகர் வட்ட தலைவர் வழக்கறிஞர் மணிக்கார்திக் வழக்கறிஞர் திருமலை வெங்கடேசன் கீழவடகரை நூலக வாசகர் வட்ட தலைவர் மோகன் கவிஞர்கள் ராமு சங்கரபாண்டியன் வாசகர்வட்ட பொருளாளர் கந்தசாமி எட்டு பட்டரைதலைவர் குருசாமி ஆசிரியர் ராஜாராம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கிய உரையில் நூலக பயனாளர்கள் நூலகத்தை பயன்படுத்தி பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கேற்று அரசு பணி பெற்று வாழ்வில் முன்னேற்றம் கண்டு பெற்றோருக்கும், ஊருக்கும், நாட்டுக்கும் பெருமைசேர்க்கவேண்டும் என கேட்டுக் கொண்டனர். இந்நிகழ்வில் வாசகர் வட்ட பொறுப்பாளர்கள்,புரவலர்கள், வாசகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். போட்டித் தேர்வு மாணவ மாணவிகளுக்கு சுமார் 200 நூலக புத்தகங்களை நூலக ஆர்வலரும், கரூர் மாவட்ட ஆட்சியருமான தங்கவேல் அன்பளிப்பாக வழங்கி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது வாசகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் நேற்று 08.06.2026 நாம் தமிழர் கட்சியின் வீரப்பன்சத்திரம் பொறுப்பாளர் வெங்கடேஷ் அவர்களும், சூரம்பட்டி 31வது வார்டு அதிமுக முன்னாள் செயலாளரும் தற்போதைய பிரதிநிதியுமான பி. நாகராஜ் அவர்களும், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பாக்கு பொன்னாடை அணிவித்து இந்திய தேசிய காங்கிரஸில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்டத் தலைவர்களான டி. திருச்செல்வம்,ஈ.ஆர். ராஜேந்திரன், மண்டலத் தலைவர்களான கே.புனிதன், எஸ். கோபி, தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (TNTUC) மாநில துணைத்தலைவர் குளம்எம்.ராஜேந்திரன், முன்னாள்மாமன்றஉறுப்பினர், பொதுச்செயலாளர்களான இரா. கனகராஜன், சூளை கதிர்வேல், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் நெசவாளர் அணி தலைவர் சி. மாரிமுத்து, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடகப்பிரிவு தலைவர் ம. முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மைத் துறை துணைத் தலைவர் கே.என். பாஷா, 46வது வார்டு தலைவர் பெரியார் நகர் சூரஜ், வாட்டர் சிவாஜி ஆகியோர் கலந்துகொண்டு, மாற்றுக் கட்சியிலிருந்து வருகை புரிந்தவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

## கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தாழ்த்தப்பட்ட சமூக மக்களுக்கு, அரசால் வழங்கபடும் இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்க வேண்டும் என்று தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக கோரிக்கை மனு அளிக்கப்பட்டது



கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டல தலைமை அலுவலகம் செயல்பட்டு வருகின்றது. இதன் மாநில துணைத்தலைவராக வழக்கறிஞரும், சமூக ஆர்வலருமான, புஷ்பானந்தம் இருந்து வருகிறார். இவரது தலைமையில் இன்று, பல்வேறு பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு இலவச வீட்டு மனை பட்டா கேட்டு பதாகைகளை ஏந்தியவாறு, போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் பொதுமக்கள், மனுக்களாக எழுதி கோவை மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வழங்கினர்.முன்னதாகசெய்தியாளர்களைசந்தித்து பேசிய வழக்கறிஞர் புஷ்பானந்தம் கூறியதாவது.. கோவை மாவட்டத்தில் நெம்பர் 24, வீரபாண்டி கிராமத்தில், ஏக்கர் கணக்கான புறம்போக்கு இடங்கள் உள்ளது. குறிப்பாக கா.சா எண் 125/1 இல் ஐந்து ஏக்கருக்கும் மேற்பட்ட பொறம்போக்கு இடங்கள் உள்ளது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்புதமிழகமுற்போக்குமக்கள் கட்சியின்சார்பாக, இலவச வீட்டுமனை பட்டா கேட்டு மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. அந்த மனுவின் அடிப்படையில் அதிகாரிகள் ஆய்வு செய்து, பாதி பேருக்கு பட்டா கொடுத்துள்ளனர். பாதி பேருக்கு பட்டா கொடுக்கப்படவில்லை. அவ்வாறு கொடுக்கப்படாமல் உள்ள பொதுமக்களுக்கு உடனடியாக வீட்டுமனை பட்டாக்களை வழங்க முன்வர வேண்டும், வீட்டுமனை பட்டா கொடுத்தவர்களுக்கு அந்த பட்டாவிற்கான இடத்தை அளவீடு செய்து, உடனடியாக அவர்கள் தங்களது வீடுகளை கட்ட உதவி புரிய வேண்டும் என்று அவர் தெரிவித்தார். குறிப்பாக கோவை தடாகம் சாலை, வேலாண்டிபாளையம், பன்னிமடை, கணபதி, கவுண்டம்பாளையம்அசொக்நகர்,போன்றபகுதியை சேர்ந்த மக்கள் இன்றுவரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும், வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், பலமுறை வீட்டு மனை பட்டா அலைந்து வருகின்றனர். எனவே மாவட்ட ஆட்சியர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து, தாழ்த்த பட்ட சமூக ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை கொடுக்க முன்வரை வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில், வழக்கறிஞர் குமாஸ்தாக்கள் லட்சுமி, திவ்யா, பால்ராஜ், ரம்யா, அமுல் ராஜ், செல்வராஜ், பாலமுருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கேரளத்தில் மீன்பிடி தடை காலம் தொடங்கியது

கேரளத்தில்மழைகாலத்தில்மீன்வளத்தை பாதுகாக்கவும். மீன் பிடிக்கும் தொழிலை பாதுகாக்கவும் ஆண்டுதோறும் மீன்படி




தடை காலம் அமல்படுத்தப்படுகிறது. இந்தியாவில் கடந்த 1988-ம் ஆண்டு முதல் மீன்பிடி தடை காலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

கடலின் ஆழமான பகுதியில் இருந்து மீன் பிடித்தலை தடுப்பதற்காகவும், மீன்கள் இனப்பெருக்க காலம் என்பதாலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

தென்மேற்கு பருவமழை காலம், அரபி கடலில் மீன்கள் இனப்பெருக்கத்துக்கு முக்கியமான காலகட்டமாகும். இதை கருத்தில் கொண்டு கேரளம் மாநிலத்தில் (செவ்வாய்க்கிழமை) முதல் ஜூலை 31-ந் தேதி வரை என 52 நாட்கள் மீன்பிடி தடை காலம் தொடங்குகிறது.

இந்த நாட்களில் எந்திர படகுகள் மூலம் சிறிய வலைகளை பயன்படுத்தி, மீன் குஞ்சுகள், தாய் மீன்கள் பிடிக்கப்படுவதை தடுப்பதே முக்கிய நோக்கம்.அதே நேரத்தில் சிறிய படகுகள், நாட்டு படகுகள் மூலம் பாரம்பரியமாக மீன் பிடிக்க தொடர்ந்து அனுமதிக்கப்பட்டு உள்ளது. அதன்படி, 12 கடல் மைல் தூரம் வரை மீன் பிடிக்கலாம். மழை காலத்தில் கடல் எல்லையில் இருந்து 12 கடல் மைல் தூரம் வரை மீன்கள் முட்டையிட்டு பெருகும். இந்த சமயத்தில் மீன்களை பாதுகாக்க வேண்டி, எந்திர படகுகளை பயன்படுத்தி மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது.

## நந்தா பாலிடெக்னிக் கல்லூரியில் வளாகத்தேர்வு




நந்தா பாலிடெக்னிக் கல்லூரியில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் சார்பில் சென்னையில் செயல்பட்டு வரும் "ஹூண்டாய்" மோட்டார் நிறுவனத்தின் வளாகத் தேர்வு நடைபெற்றது.

வள இவ்வளாகத் தேர்வினை "ஹூண்டாய்" நிறுவனத்தின் சார்பில் மனித துணை மேலாளர் சாம் மோசஸ் தலைமையில் மூன்று பேர் அடங்கிய குழுவினர் பங்கு கொண்டு குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

இவ்வளாகத் தேர்விற்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளைத் த லை வ ர் வி.சண்முகன் தலைமையில் நடைபெற்ற இவ்வளாகத்தேர்வில் கல்லூரியின் முதல்வர் ஜீ. மோகன்குமார் முன்னிலை வகித்தார்.

முன்னதாக கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் ஒருங்கிணைப்பாளர் கே.வி. பிரபு நிகழ்ச்சியில் பங்கு கொண்ட சிறப்பு விருந்தினர்களை வரவேற்று, மாணவர்களை வாழ்த்திப் பேசினார்.

பின்னர் "ஹூண்டாய்" நிறுவனத்தின் அங்கத்தினர் மனித வள துணை மேலாளர் ர ா ஜ் கு ம ா ர் சிறப்புரையாற்றுகையில், எங்களது நிறுவன மானது தொடர்ந்து 16 ஆண்டுகளுக்கும் மேலாக இக்கல்லூரியில் வளாகத்தேர்வினை சிறப்பான முறையில்நடத்திவருகிறோம்.

இதற்கு கற்றுக்கொடுக்கக் கூடிய ஆசிரியர்கள் மற்றும் வேலைவாய்ப்பு துறையினர்மாணவர்களுக்கு கொடுக்கப்படும் சிறந்த பயிற்சி முறைகளே மிக முக்கிய காரணம் என்றார்.

தென்கொரியாவினை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் எங்களது நிறுவனமானது ஆப்பிரிக்கா, லத்தீன், அமெரிக்கா, ஆஸ்திரேலியாஉட்படமொத்தம் 87 நாடுகளில் மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்து வருகிறது. கடந்த 16 வருடங்களாக மோட்டார் உற்பத்தியில் 465 க்கும் மேற்பட்ட விற்பனைமையங்கள் மற்றும் 1000 க்கும் மேற்பட்ட சேவை நிலையங்கள் மூலமாக சிறந்த பணிகளை மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

சென்னையிலும், தெலுங்கானா மாநிலத்திலுள்ள ஹைதராபாத்திலும் இயங்கி வரும் எங்களது தொழிற்கூடத்திற்கு தங்களைப் போன்ற டிப்ளமோ பயிலும் மாணவர்களின் தேவையினை கருத்தில் கொண்டு ஆண்டுந்தோறும் நேரிடையாக வந்துக்கொண்டிருக்கிறோம் என்றார்.

இவ்வளாகத்தேர்வினை ஏற்பாடு செய்திருந்தகல்லூரிபயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் ஆசிரியர்களுக்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப்,எஸ்.திருமூர்த்தி மற்றும்நந்தாதொழில் நுட்ப வளாகத்தின் நிர்வாக அதிகாரி ஏ. கே.வேலுசாமி ஆகியோர் தங்களது பாராட்டுகளைத்தெரிவித்தார்கள்.



தென்காசி வருகை தந்த மாவட்ட பொறுப்பு அமைச்சர் ராஜீவுக்கு தவெகமுத்த உறுப்பினர் K.சிவ சீத்தாராம் வரவேற்புஅளித்ததென்காசி மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு மாவட்ட பொறுப்பு அமைச்சர் ராஜீவ் அவர்களை தென்காசி மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த K.சிவ சீத்தராம் நேரில் சந்தித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.



### தூத்துக்குடி மாநகராட்சி அதிமுக மாமன்ற கொறடா மந்திரமூர்த்தி தலைமையில்

## அதிமுகவினர் மற்றும் வழக்கறிஞர்கள் 500 பேர் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர்

2026 சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகி, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் புதிய முதலமைச்சராக அரியணை ஏறியதில் இருந்து, தமிழக அரசியல் களம் இதுவரை கண்டிராத அசுர வேக மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. இதன் உச்சக்கட்டமாக, பிரதான எதிர்க்கட்சியான அதிமுகவின் தூண்களாக விளங்கிய 4 முக்கிய முன்னாள் அமைச்சர்கள் மற்றும் திமுக, அமமுக, பாஜக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த கட்சி முன்னணி மாவட்ட நிர்வாகிகள், மாநிலப் பொறுப்பாளர்கள் மற்றும் தொண்டர்கள் கொத்து கொத்தாக தவெகவில் இணைந்துள்ளனர்.

அந்த வகையில் தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றகொறடாவழக்கறிஞர் மந்திரமூர்த்தி தலைமையில் அதிமுகவினர் மற்றும் வழக்கறிஞர்கள் 500 பேர் அதிமுகவிலிருந்து விலகி தமிழக வெற்றி கழகத்தில் இணையும் விழா தூத்துக்குடி பிரையண்ட் நகரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னதாக இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த தமிழக வெற்றிக்கழக மாவட்ட செயலாளர் எஸ் டி ஆர் சாமுவேல்ராஜ்க்கு வழக்கறிஞர் மந்திரமூர்த்தி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் சால்வை அணிவித்து தங்களை அதிமுகவில் இணைத்துக் கொண்டனர் அவர்களுக்கு தமிழக வெற்றிக்கழக மாவட்ட செயலாளர் எஸ் டி ஆர் சாமிவேல்ராஜ் தமிழக வெற்றி கழகத்தின் சார்பு அணிவித்து அவர்களை தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

தொடர்ந்து வழக்கறிஞர் மந்திர மூர்த்தியின் காரில் முன்பக்கம் பொருத்தப்பட்டிருந்த அதிமுககொடி அகற்றப்பட்டுதமிழகவெற்றிகழகக் கொடியை மாவட்ட செயலாளர் எஸ் டி ஆர் சாமுவேல்ராஜ் மாட்டிவிட்டார் இதை தொடர்ந்து பட்டாசு வெடித்து வான வேடிக்கைகள்நிகழ்த்தப்பட்டது.

## 55 வயதிற்கு உட்பட்ட உடற்கல்வி ஓவியம் உள்ளிட்ட சிறப்பாசிரியர்கள் பணியில் தொடர ஆசிரியர் தகுதி தேர்வு கட்டாயமில்லை

### பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் முனைவர்.ச.கண்ணப்பன் விளக்கம்



மதியம் பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் முனைவர்ஐயாச.கண்ணப்பன் அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அவர்கள் அலைபேசியில் தொடர்புக் கொண்டு 55 வயதிற்கு கீழ் உள்ள உடற்கல்வி , ஓவியம் போன்ற சிறப்பு ஆசிரியர்கள்பணியில்தொடர தகுதி தேர்வு கட்டாயம் எழுதி தேர்ச்சி பெற வேண்டுமா என கேட்டறிந்தார் அப்போது பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் மதிப்புமிகு ஐயா முனைவர் கண்ணப்பன் அவர்கள் அளித்த விளக்கம் 55 வயதிற்கும் கீழ் உள்ள உடற்கல்வி,ஓவியம் உள்ளிட்ட சிறப்பாசிரியர்களுக்கு பணியில் தொடர தகுதி தேர்வுஎழுதவேண்டும் என்ற அவசியம் இல்லைஎன்றார் அதேநேரத்தில் பட்டப்படிப்புடன் கல்வியியல் பட்டம் பெற்று பதவி உயர்வு தேவை எனும் ஆசிரியர்கள் கட்டாயம் ஆசிரியர்தகுதிதேர்வுஎழுதி தேர்ச்சிபெறவேண்டும் ,தேர்ச்சி பெற்றால் மட்டுமே பட்டதாரி ஆசிரியராகபதவிஉயர்வுபெற முடியும் என்று விளக்கினார் , இதே சந்தேகத்தை சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்தபோதும் பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் முனைவர் ஐயா ச.கண்ணப்பன் அவர்களிடம் கேட்கப்பட்டத்து சீராய்வு மனுக்களின் மீதான உச்சநீதி மன்ற தீர்ப்பிற்கு பிறகு இன்றும் (08.06.2026 ) பல ஆசிரியர்கள் கோரிக்கைகளை ஏற்று தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அவர்கள் மீண்டும் கேட்டார் சந்தேகங்களுக்கு பொறுமையாக தெளிவாகவிளக்கத்தை வழங்கினார் சந்தேகங்களுக்கு முற்று புள்ளி வைத்த ஐயா அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியரகள் ஆசிரியர்கள் நலகூட்டணமைப்பு சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு மாநில அமைப்பு

## பாண்டியாபதி பரதவர் நல தலைமைச் சங்கத்தினர் அமைச்சர் ஸ்ரீநாத்திடம் கோரிக்கை, விரைவில் தீர்வு என அமைச்சர் உறுதி



தூத்துக்குடி, பாண்டியாபதிபரதவர்நலதலைமைச் சங்கம் சார்பில் ஐந்து மாவட்ட பரதர் ஊர்நலக்கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடி பனிமய மாதா ஆலயம் அருகில் உள்ள பாண்டியாபதிபரதவர்நலதலைமைச் சங்க அலுவலகத்தில் பொதுச் செயலாளர் இன்னாசி தலைமையில், தலைவர் ஜேஎம்ஜே அந்தோணிசாமி ஆலோசனையின் பேரில் நடைபெற்றது.

கூட்டத்தில் செய்தியாளர்களை சந்தித்த சென்னை பிரவீன் குமார், பொதுச் செயலாளர் இன்னாசி ஆகியோர் கூறுகையில் ;

தமிழ்நாடு கடலோர 14 மாவட்டங்களில் பின்தங்கிய மீனவ மக்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார உரிமைகள் அடங்கிய கோரிக்கைளை மீன் வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத்தை தூத்துக்குடி அரசுவிருந்தினமாளிகை நேரில் சந்தித்து பாண்டியாபதி பரதர் நல தலைமைச் சங்க நிர்வாகிகள் கோரிக்கை மனு அளித்தனர். மனுவை பெற்றுக் கொண்ட அமைச்சர் ஸ்ரீநாத் வருகிற சட்டமன்ற கூட்டத்தொடர் முடிந்தவுடன் 14 கடலோர மாவட்டங்களில் மீனவ மக்களை நேரில் சந்தித்தும் மக்களின் கோரிக்கைகளை ஆய்வு செய்து விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். மேலும் அமைச்சர் ஸ்ரீநாத் கடந்த வாரம் புன்னக்காயல் மீனவ கிராமத்தில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு புன்னக்காயல் மக்களுக்கு நன்றி தெரிவித்த நிகழ்ச்சியை தூத்துக்குடியில் உள்ள முன்னாள் திமுக அமைச்சர் உள்நோக்கத்துடன் அமைச்சர் ஸ்ரீநாத் மீது தேவையற்ற அவதூறு கருத்துக்களை சமூக வலைத்தளங்களில் பரப்பி வருகின்றார். நீண்ட ஆண்டுகளுக்கு பிறகு பரதவர் குல மக்களுக்கு அமைச்சரவையில் பங்கு கிடைத்து ள்ளது. அதுவும் எங்களின் முக்கிய கோரிக்கையான மீன் வளத்துறைக்கு பரதவர் சமுதாயத்தை சேர்ந்தவருக்கு முதலமைச்சர் ஜோசப் விஜய் இந்த வாய்ப்பை வழங்கியுள்ளார். முதலமைச்சருக்கு இந்த தருணத்தில் நன்றி தெரிவித்தும். அமைச்சர் ஸ்ரீநாத்திடம் வெற்றி வாய்ப்பை இழந்த முன்னாள் திமுக அமைச்சர், ஸ்ரீநாத் வளர்ச்சியை பொறுத்துக்கொள்ள முடியாமல் சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பி வருவதை பாண்டியாபதி பரதர் நல தலைமைச் சங்கம் சார்பில் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்வதாகதெரிவித்தனர். நிகழ்ச்சியில் கூத்தன்குழி வளன் சந்திரா, திருநெல்வேலி பிரகாஷ், தூத்துக்குடி ஜான் பெர்னான்டோ, மயிலாடுதுறை செந்தில்குமார், சேலம்எடப்பாடிராஜாளி பக்தன்,தமிழ்ச்செல்வன், பாம்பன் பெர்னிக்ட்,சிங்கித்துறை அகஸ்டின், இன்னாசி, கொற்கை ஜெவி, மற்றும் பாண்டியாபதிபரதவர்நலதலைமைச் சங்க நிர்வாகிகள் ஜான் டில்டன், வினோத், ரவின்டோ,ஜெகன் பலர் கலந்து கொண்டனர்.

## தென்காசியில் வர்த்தக கண்காட்சி அமைச்சர் மதன்ராஜா பார்வையிட்டார்

தென்காசியில் தனியார் மண்டபத்தில், தென்காசி மாவட்ட சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கம் சார்பில் நடைபெற்று வரும் வர்த்தக கண்காட்சியை, சிறு குறு மற்றும் நடுத்தரதொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மதன்ராஜா, ஆட்சியர் ரஞ்சித் சிங் தலைமையில் திருநெல்வேலி எம்.பி., ராபர்ட் ப்ரூஸ் முன்னிலையில் பார்வையிட்டார்.

தென்காசி மாவட்ட குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள னசங்கம்சார்பில்மூன்று நாட்கள் நடைபெறும் வர்த்தக கண் காட்சியின் இரண்டாம்நாள் நிகழ்ச்சியில் நேற்று

அமைச்சர் பல்வேறு தொழில் நிறுவனங்கள் சார்பில் காட்சிப் படுத்தப்பட்டுள்ள தொழில் நுட்பங்களை பார்வையிட்டு அதன் செயல் திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து தொழில் முன்னோடிகளை பாராட்டி, பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கி கௌரவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட தொழில் மைய மேலாளர் மாரியம்மாள், மாவட்ட குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கத்தின் தலைவர் அன்பழகன்,



முக்கிய பிரமுகர்கள், த.வெ.க.,மாவட்ட செயலாளர்கள் ராஜபிரகாஷ், நியாஸ், மாரியப்பன் மாவட்ட இளைஞர்அணி சார்லஸ் , மாவட்ட மகளிர் அணி முத்துச் செல்வி உள்பட பலர் கலந்து கொண்டனர்

## ஆலங்குளம் அருகே 10 மற்றும் 12ம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்ற அருந்ததியர் மாணவர்களுக்கு பாராட்டு விழா

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே வெங்கடேஷ்வரபுரம் கிராமக்கமிட்டி மேல்நிலைப்பள்ளியில் 2025-2026 கல்வி ஆண்டில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவமாணவிகளுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

10 -ம் வகுப்பில்

500/457 மதிப்பெண் பெற்று முதல் இடம் பிடித்த மாணவி காயத்ரி

12 ம் வகுப்பில்

600 / 553 மதிப்பெண் பெற்று முதல் இடம் பிடித்த மாணவன் எம்.விஜயராம்,ஆகியோர் அருந்ததியர் சமுதாயத்திற்கு பெறுமை சேர்த்தனர்.

இவர்களை நிலா ஸ்போர்ட்ஸ் கிளப் அணி சார்பிலும் ஊர் சமுதாய பொதுமக்கள் சார்பிலும் பொன்னாடை அணிவித்து நினைவு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டது.

இந் நிகழ்வில் ஆறுமுகம், சங்கர், பாண்டி, பெருமாள், மாரிமுத்து, மாரீஸ்வரன், கருப்பசாமி, முத்துக்குமார், அசாம் மணி,

மாரிமுத்து , பாண்டி, உட்பட பலர் கலந்து



கொண்டனர்

இதற்கான ஏற்பாடுகளை நிலா ஸ்போர்ட்ஸ் கிளப் நிர்வாகி இசக்கிமுத்து தலைமையில் செய்திருந்தனர்.

## கோவை அவிநாசி சாலை கோல்ட்வின்ஸ் பகுதியில் வாரி அகாடமி எனும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் தொடக்க விழா

கோவை அவிநாசி சாலை கோல்ட்வின்ஸ் பகுதியில் வாரி அகாடமி எனும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் தொடக்க விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பாரதியார் பல்கலைக்கழக பதிவாளர் கார்த்திகேயன், பயிற்சி மையத்தை திறந்து வைத்து மாணவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார்.

பின்னர்செய்தியாளர்களை சந்தித்த அவர், இன்றைய காலகட்டத்தில் பள்ளிக் கல்வியை முடிக்கும் மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகள் மிகவும் அவசியமானதாக மாறியுள்ளதாக தெரிவித்தார். மாணவர்கள் தங்களது இலக்குகளை அடையும் வகையில் பத்தாம் வகுப்பு முதலே திட்டமிட்டு படிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், கடந்த சில ஆண்டுகளாககலைமற்றும்அறிவியல்கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை சற்று குறைந்திருந்தாலும், இந்த ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகத்தில் மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளதாக கூறினார். குறிப்பாக இயற்பியல் மற்றும் வேதியியல் துறைகளில் மாணவர் சேர்க்கை குறைந்துள்ளதால்,ஆஸ்திரேலிய பல்கலைக்கழகத்துடன் இணைந்து பார்தியார் பல்கலைக்கழகத்தில் 'பயோ சயின்ஸ்' என்ற புதிய பாடப்பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும்

அத்துடன், பல்கலைக்கழகத்தில் ஆறு புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். செயற்கை நுண்ணறிவு தொடர்பான படிப்புகளில் மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டி வருவதால், அந்தப் பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் நவீன தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். மேலும் பார்தியார் பல்கலைக்கழகத்தில் உள் கட்டமைப்பு மேலும் மேம்படுத்தப்பட வேண்டும்



என்றும் அதற்காக அரசிடம் கோரிக்கை வைத்துள்ளதாகவும் பாரதியார் பல்கலைக்கழகத்தின் தொலைதூர கல்விதிட்டத்தில்புதிதாக 10 பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்த வேண்டி அரசுக்கு கருத்து அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறியவர்பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள் இணை பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் என 60 பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும்அவற்றை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். அதை தொடர்ந்து பேசிய வாரி அகாடமி தலைவர் லோகேஷ் பொன்னுசாமி, இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப போட்டி தேர்வுகளுக்கு மாணவர்களை தங்களது கல்வி நிறுவனம் தயார் செய்து வருவதாகவும் கடந்து 10 ஆண்டுகளாக போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் நடத்தி வருவதாகவும் தெரிவித்தார். இதுவரை 2500 மாணவர்களுக்கு பயிற்சி அளித்து 400க்கும் மேற்பட்ட அரசு மருத்துவர் உருவாக்கி உள்ளதாகவும் ஏழை மாணவ மாணவிகளுக்கு குறைந்த கட்டணத்தில் பயிற்சி வழங்கி வருவதாகவும் கூறியவர் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 10 ஏழை மாணவ மாணவியரை தேர்ந்தெடுத்து இலவச பயிற்சி வழங்கி வருவதாகவும் அரசு பள்ளி மாணவ மாணவிகளை போட்டி தேர்வுகளுக்கு தயார் செய்து அவர்களை வெற்றியடைய செய்வதேதங்கள் நோக்கம் என்றும் பெருமிதம் கொண்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (8.06.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.



தென்காசி மாவட்டத்திற்கு வருகை தந்த சமூக நலத்துறைமற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரிக்கு தவெக தென்காசி மேற்கு மாவட்ட செயலாளர் நியாஸ் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் தொண்டர்கள் என ஏராளமான வரவேற்பு அளித்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (8.06.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில 2024 ஆம் ஆண்டில் சிறப்பாகப் பணிபுரிந்த நியாயவிலைக் கடைப்பணியாளர்களுக்கு மாவட்ட அளவிலான பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் (தனி) (நிலமெடுப்பு) மஞ்சுளா உள்ளார்.

## தூத்துக்குடியில் ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் 50 பேர் முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்

*தமிழ்நாடு ஐக்கிய ஜனதா தள கட்சியின் தூத்துக்குடி மாவட்ட தலைவர் குழந்தை பாண்டி, மாவட்ட செயலாளர் வெயிலாட்சி, மாநகர தலைவர் சக்தி செல்வன், மாவட்ட துணை செயலாளர் அருண்குமார், மாநகர துணை செயலாளர்கள் முருகேசன், உமையலட்சுமி, பொதுக்குழு உறுப்பினர் கமர்தீன் பாய், செயற்குழு உறுப்பினர் சத்யா மற்றும் கட்சியினர் சுமார் 50 பேர் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீ தா ஜீ வ ன் முன்னிலையில் கலைஞர் அரங்கில் திமுக வில் இணைந்தனர்.*



*அனைவரையும் கீதாஜீவன் சால்வை அணிவித்து வேஷ்டி சேலை வழங்கி கௌரவித்து திமுகவில் இணைந்ததற்குவாழ்த்திவரவேற்று வரும் காலத்தில் தங்களது பகுதியில் திமுக ஆட்சியில்நடைபெற்ற தி ட் ட ங் க ளை யு ம் ஸ்டாலின் சாதனைகளையும் மக்களுக்கு எடுத்துக்கூறிதிமுகவின் வெற்றிக்கு பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.*

*நிகழ்ச்சியில் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன்,மாவட்ட தகவல்தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் அந்தோணிகண்ணன், பிரபு, மருத்துவ அணி தலைவர் அருண்குமார், அயலக அணி அமைப்பாளர் கிறிஸ்டோபர் விஜயராஜ், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரவி, பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், வட்டப்பிரதிநிதி பாஸ்கர், மற்றும் மணி அல்பட் உள்பட பலர் கலந்து கொண்டனர்.*

## தேவாலா நகர சுகாதார நிலையத்தில் புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் ஆல் தி சில்ரன் சார்பில் நிகழ்ச்சி நடைபெற்றது




*தேவாலா நகர சுகாதார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஆல் தி சில்ரன் மாவட்ட ஒ ரு ங் கி ணை ப் பா ள ர் அஜித் தலைமை தாங்கினார்*

*கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்புமையம்செயலாளர் சிவசுப்பிரம ணியம், அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் பாண்டியன், பிரவீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*வட்டார மருத்துவ அலுவலர் கதிரவன் ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கி பேசும்போது தொற்றா நோய்கள் தான் அதிக உயிரிழப்பு ஏற்படுகின்றன. அதில் புற்றுநோயும் ஒன்று. உணவு பழக்கம் முதல் நம்மில் உள்ள புகையிலை உள்ளிட்ட போதை பயன்பாடு போன்றவையும் புற்றுநோய் ஏற்படுத்தும் எனவே இவற்றை தவிர்க்க வேண்டும். புற்றுநோய் குறித்து பரிசோதனை அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாய்புற்று , பெண்களுக்கான புற்றுநோய் பரிசோதனைகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் ஆரம்பகட்டத்தில் கண்டறிந்தால் சிகிச்சைகள் மூலம் குணப்படுத்தி கொள்ளலாம். புற்றுநோயாளிகள் ஊட்டசத்து உணவுகளை எ டு த் து க் கொ ள் வ து அவசியம் என்றார். முதற்கட்டமாக 25 பேருக்கான ஊட்டசத்து பெட்டகம் வழங்கப்பட்டது. தொடர்ந்து தேவாலா, நெல்லியாளம், அய்யங்கொல்லி, அம்பலமூலா, கப்பலா, கொளப்பள்ளி உள்ளிட்ட அரசு ஆரம்பசுகாதார நிலையங்களை சேர்ந்த புற்றுநோய் பயனாளிகளுக்கு ஊட்டசத்து பெட்டகம் வழங்கப்பட்டது.*

*நிகழ்ச்சியில் பலியட்டிவ் பிரிவு செவிலியர் நிஷாந்தினி மற்றும் செவிலியர்கள், மருத்துவமனை பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

### ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

*ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (08.06.2026) மாவட்ட ஆ ட் சி த் த லை வ ர் ச.கந்தசாமி தலைமையில்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.*




*இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, மகளிர் உ ரி மை த் தொ கை , முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, தனிப்பட்டா மாறுதல், மின்னணு குடும்ப அட்டை, மின் இணைப்பு,மேல்நிலை நீர்தேக்க தொட்டி, தெருவிளக்கு,ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொ த் த ம் 282 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சி த் த லை வ ர் அவர்கள் பெற்று உரிய துறை அ லு வ ல ர் க ளி ட ம் வழங்கிஅவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.*

*நேற்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோபிசெட்டிபாளையம் வட்டம், மொடச்சூர் பகுதியை சேர்ந்த சத்யவாணி, க/ பெ.இளங்கோ என்பவருக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட வீட்டிற்கு பங்களிப்பு தொகையாக ரூ.88,000/-மதிப்பிலான காசோலையினை மாவட்ட ஆட்சியரின் விருப்பக்கொடை நிதியிலிருந்து வழங்கினார்.*

*தொடர்ந்து, 2024-ஆம் ஆண்டில் சிறப்பாகப் பணிபுரிந்த நியாயவி லைக் க டை ப் ப ணி யா ள ர் க ளு க் கு மாவட்ட அளவிலான பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். இக்கூட்டத்தில், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலமெடுப்பு)மஞ்சுளா,தனித்துணை ஆட்சியர் (ச. ப ா . தி ) செல்வராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார், மாவட்ட பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் நல அலுவலர் ஜாகீர்உசேன்,மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர்பூபதி உட்பட அ னை த் து த் து றை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

# Iran flights cancelled till further notice, Tehran halts strikes on Israel



*West Asia finds itself on the verge of a full-blown war again after Israeli defence forces struck military targets in Iran early Monday in retaliation to Iran's missile attack at Israel late Sunday. This fresh exchange of strikes between Iran and Israel is the first one since temporary ceasefire took place on April 8.*

*So far since Monday morning, Israeli forces have warned that a third barrage of missiles has been fired from Iran. Earlier in the day, Israel said that it hit a petrochemical plant in Iran's Mahshahr.*

*Meanwhile, Iran-backed Houthi rebels in Yemen also said they fired missiles at Israel and have completely banned Israeli ships from navigating through the Red Sea.*

*"We declare a complete and total ban on Israeli maritime navigation in the Red Sea," said a statement by the Houthis.*

*"We consider all enemy movements to be legitimate military targets for our armed forces from the moment this statement is issued," the statement added.*

*India issues advisory*

*The Indian embassy in Iran advised people on Monday to avoid travelling to Iran amid renewed strikes in the region. It also asked Indian nationals in Iran to leave the country by any available means of transport.*

*What triggered fresh tensions?*

*On Sunday, Iran struck Israel after Tehran warned of action over Netanyahu's repeated attacks on Lebanon. The war between Lebanon and Israel has been a major front in the ongoing conflict with Israel continuing to attack it while Tehran has maintained that ceasefire there is key for a peace deal with the United States.*

*Earlier in the day, Israel took Lebanon capital Beirut's southern suburbs with surprise with strikes with no prior warning, going against its ally US' request to hold off fighting. According to Israel, before it struck Lebanon, Iran-backed Hezbollah fighters fired at Israel on Sunday itself.*

*Trump asked Israel not to strike back Iran*

*After Iran's offensive on Sunday night, US President Donald Trump had told Israeli Prime Minister Benjamin Netanyahu to not launch any retaliatory strikes and to let diplomacy take care of the situation, Axios reported citing a senior US official and an Israel source familiar with the development.*

*According to the senior US official, there was no "green light" by the US for the Israeli strike on Beirut on Sunday.*

*US-Iran peace deal close?*

*The US official also told Axios that during the call, Trump asked Netanyahu not to escalate the situation because they are "close to doing something good in terms of a deal". However, Netanyahu pushed back to the request before "pseudo agreeing" to it, the official said.*

*"We think the president bought a little bit of time. He is pretty adamant that we are close to a deal with Iran. I don't think anything is imminent in terms of an Israeli strike," the official was quoted as saying.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.